## இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் - 2016

------------------------------------------------------------------------------------

இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்பட்டலாம்.

# 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியாக நீடிப்பு

2015 மற்றும் 2016 ஆண்டுகளின் இறுதியில் சபையில் முறையே ரூபா 535,643,537 தொகை மற்றும் ரூபா 525,639,091 தொகைக்கான மறைப் பெறுமதியான தேறிய சொத்துக்கள் நிலைமையொன்று காணப்பட்டதுடன், அவ்வாண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் மொத்த சொத்துக்களுக்கு மொத்த பொறுப்புக்களின் விகிதாசாரம் முறையே 1 : 5 . 60 ஆகவும் மற்றும் 1 : 5 . 04 ஆகக் காணப்பட்டமையால், தொழிற்படு மூலதன சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியாகும்போது போது கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணி 39 பேருக்கு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 09 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் கடந்த யுத்த சூழ்நிலை மற்றும் மூலப்பொருட்கள் அரிதாக இருத்தல் ஆகிய காரணங்களினால் மூடப்பட்டிருந்தன. சபையின் தொழிற்சாலைகளை தகுதியான முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குதல் அல்லது கம்பனியை மீள நிறுவும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்காக 2010 ஆம் வருடம் முதல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையை அகற்றி தகுதிவாய்ந்த அலுவலர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சபையை தொடர்ந்தும் நடாத்தி செல்வது தொடர்பில் மேற்படி நிலமைகள் பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 55 ஆம் இலக்கப் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் தேய்மானத்தை கணித்தல் அதனைப் பாவனைக்கு உகந்த நிலமைக்கு ஆக்கியதன் பின் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இருந்தும் அதற்கு முரணாக நிறுவனத்தின் மூலம் சொத்தொன்றினைக் கொள்வனவு செய்த வருடத்திலேயே தேய்வை கணிக்காமல் இருப்பதற்கும் சொத்துக்களை அகற்றும் வருடத்தில் தேய்மானம் கணிக்கப்பட வேண்டுமென கணக்கீட்டுக் கொள்கைகள் 2 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வு ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 678,820 பெறுமதியான சொத்துக்களின் தேய்மானம் கணிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

(i) நியமங்களில் 36 (ஏ) பந்தியின் பிரகாரம் இருப்புக்களின் பெறுமதியினை மதிப்பிடும் கண்க்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 36(ஈ) பந்தியின் பிரகாரம் இருப்புக்களை நீக்குதல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவேண்டியிருந்தும், 2016 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாரான கூட்டுத்தொகை ரூபா 1,750,649 ஆன 02 தொழிற்சாலைகளின் இருப்புக்களை அகற்றுதல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

நடைமுறையல்லாச் சொத்துக்களிற்காக விணைதிறனான ஆயுல் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக ரூபா 4,378,333 கிரயமான 03 வாகணங்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்தாலும் அவைகள் மேலும் உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவினை இலங்கைக் கண்க்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 தொழிற்சாலைகளில் உற்பத்திப் விடயங்களிற்காக 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களில் பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,000,000 தொகை சம்பந்தப்பட்ட வருடத்தில் வருமானமாக வருமானக் கூற்றில் வரவு வைப்பதற்குப் பதிலாக அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததனால் குறித்த பெறுமதியில் அமைச்சின் ஒதுக்கீடு என போலியான ஒதுக்கீடொன்று ஏற்பட்டிருந்ததது.

(ஆ) சபை ஊழியர்களின் தன்னார்வ ஓய்வூதிய இழப்பீடு, பணிக்கொடைத் தொகை, மற்றும் நிழுவையான சேமலாபநிதி என்பவைகளைச் செழுத்துதல் அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்காக 2012 ஆம் வருடம் முதல் 2016 ஆம் வருடம் வரை 02 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனம் சபைக்காக செழுத்திய கூட்டுத் தொகை ரூபா 387,275,583 தொகை அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு செழுத்த வேண்டிய தொகையாகக் காட்ட வேண்டியதற்குப் பதிலாக நீண்டகாலப் பொறுப்பின் கீழ் திறைசேறிக் கடனாகக் கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபணத்தின் தாபன மற்றும் நிர்வாக செலவினங்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய கூட்டுத்தொகையான ரூபா 26,067,612 மற்றும் உயர் முகாமைத்துவக் கொடுப்பனவுகளாக செழுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,222,500 ஆன நிருவாகச் செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் உற்பத்திச் செலவினங்களாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(ஈ) உற்பத்திச் செலவினங்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டிய கூறை ஓட்டு உற்பத்திக்கான கூட்டுத்தொகை ரூபா 1,552,909 ஆன நேரடிச் செலவினங்கள் தாபன மற்றும் நிருவாகச் செலவினங்களாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் வருடத்தில் மார்ச் மாதம் முதல் திசம்பர் வரையிலான 10 மாதங்களுடன் தொடர்பான ரூபா 566,810 கூட்டுத்தொகையான ஒன்று சேர்க்கப்பட்ட வாடகை கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையின் தலைமை அலுவலகத்தினால் வருடத்தினுல் ஒவ்வொரு தொழிற்சாலைகளிற்காகவும் 05 முற்பணக் கணக்குகள் பேனப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 05 தொழிற்சாலைகள் தொடர்பான கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 589,746 ஆன முற்பணக் கணக்குகளைக் பூர்த்திசெய்யாமல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக இருப்பு மதிப்பாய்வுக் குழு அறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 43,430,594 ஆகக் கானப்பட்ட மொத்த இருப்பு மீதியினை பெரேட்டின் இருப்பு மீதிக்கு சீர் செய்வதற்காக 12/58 ஆம் இலக்க நாளேட்டுக் குறிப்பினூடாக ரூபா 3,058,645 தொகையினை இலாப நட்டக் கணக்கிற்கு பற்று வைத்து ரூபா 1,186,269 தொகை குறித்த கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆண்டின் இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகையினை அடையாளப்படுத்தாமல் மேற்கொண்ட இக்கணக்கு வைப்புக்கள் தொடர்பாக கணக்காய்விற்கு போதுமான தெளிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டினுல் சபையின் தலைமை அலுவலகத்தில் கைப்பணப் பேரேட்டுக் கணக்கிற்கு 12/108 ஆம் இலக்க நாளேட்டுக் குறிப்பினூடாக ரூபா 48,949 தொகையினை வரவு வைத்து குறித்த பெறுமதியினை தொங்கல் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டிருந்தது. இந்நாளேட்டுக் குறிப்பினை கணக்குவைக்கும் துள்ளியத்தன்மையை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தாதனால், மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதிக்கு கைப்பணக்கணக்கில் ரூபா 125,000 ஆன மீதியின் துள்ளியத்தன்மை தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) சபையின் 05 தொழிற்சாலைகளின் செலவுகளை மேற்கொள்வதற்கு பணம் வழங்குவதற்காக உபயோகிக்கப்பட்ட 06 கட்டுநிதிக் கணக்குகளில் 2016 ஜனவரி 01 ஆம் திகதிக்கு கூட்டுத்தொகை ரூபா 2,191,248 ஆன ஆரம்ப மீதிகளில் வித்தியாசம் கானப்பட்டது. இவ்வித்தியாசத்தை அறிந்து திருத்தங்களின்றி 12 / 112 மற்றும் 12 / 108 இலக்கங்களையுடைய இரண்டு நாளேட்டுக் குறிப்புக்களையும் உபயோகித்து அப்பெறுமதியினை தொங்கல் கணக்கில் பற்று வைத்து கட்டுநிதிக்கணக்குகளில் வரவு வைத்து மீளாய்வு அண்டினுல் கட்டுநிதிக் கணக்குகள் சமப்படுத்தப்பட்டிருந்தன. இக்கணக்குகளை சமப்படுத்தும் துள்ளியத்தன்மை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுல் ஒட்டிசுட்டான், இறக்காமம் தொழிற்சாலைகளின முகாமையாளர் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் முறையே ரூபா 216,049, மற்றும் ரூபா 451,000 பற்று மீதிகள் மற்றும் எலயாபற்று தொழிற்சாலை முகாமையாளர் கட்டுப்பாட்டுக் கண்க்கில் ரூபா 24,000 வரவு மீதியும் 1 / 155 ஆம் இலக்க நாளேட்டுக் குறிப்பின் மூலம் தொங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டு கட்டுப்பாட்டுக் கணக்குகள் சமப்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முகாமையாளர் கட்டுப்பாட:டுக் கணக்குகளில் துள்ளியத்தனமையை உறுதிசெய்து கொள்வதற்கு போதுமான சாட்சிகளை கணக்காய்விற்கு முன்வைக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| (அ). காணிகளும் கட்டிடங்களும் | 23,755,784 | கூட்டுத்தாபனத்தின் 07 ஓட்டுத் தொழிற்சாலைகளுக்கு உரித்தான 187 ஏக்கர் 02 ரூட் பரப்பளவான காணிகள் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானவை என உறுதிப் படுத்துவதற்காக காணி உறுதிகள், அனுமதிப்பத்திரங்கள் அல்லது முறையான சட்டரீதியான அவனங்கள் |
| (ஆ).இரண்டு தொழிற்சாலைகளின் சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்கள் | 3,533,383 | நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வுச் சபையின் அறிக்கைகள் |
| (இ). செழுத்த வேண்டிய வரி | 176,263,306 | வரிக் கோவைகள மறறும் செழுத்த வேண்டிய வரிகள் தொடர்பாக உறுதி செய்துகொள்வதற்கு போதுமான எழுத்து மூலமான சாட்சிகள் மற்றும் கணிப்பீடு செய்யும் ஆவனங்கள் |
| (ஈ).கிடைக்க வேண்டிய வருமான வரி | 1,221,666 | |
| (உ) ஏனைய வைப்புக்கள் | 3,010,675 | வைப்பு ஆவணங்கள் மற்றும் மீதிகளை சான்றுப்படுத்தும் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 7,547,407 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் 01 முதல் 02 வருடங்கள் வரையிலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,316,853 தொகையும், 02 தொடக்கம் 03 வருடங்கள் வரையிலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 539,937 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,289,031 தொகையாகவும் இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான ரூபா 59,466,030 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் 01 முதல் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 485,025 தொகையும், 02 முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 157,045 தொகையும் மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,556,829 ஆகவும் இருந்தன.

(இ) 2016 ஆம் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,580,630 கூட்டுத்தொகையான கணக்காய்வு கட்டணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) <u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை</u> | |
| (i) நிதிப் பிரமாணம் 135 | நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள் எழுத்து மூலமாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப் பிரமாணம் 384(3) | காசோலை ஏடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) நிதிப் பிரமாணம் 386(6) | அனைத்துக் காசோலைகளும் கட்டளைக்கு செழுத்த வேண்டியவாறு எழுதப்பட்டு குறுக்குக் கோடிடப்பட வேண்டியதுடன், கொடுக்கல் வாங்களுக்காக உபயோகிக்கும்போது மேலொப்பமிட்டு குறுக்குக் கோடுகள் ரத்துச் செய்யப்பட வேண்டியிருந்தும், மீளாய்வு ஆண்டினுல் திறந்த காசோலைகளை உபயோகித்து 13 சந்தர்ப்பங்களில் ரூபா 1,825,000 கூட்டுத்தொகை செழுத்தப்பட்டிருந்தன. |
| (iv) நிதிப் பிரமாணம் 386(ஊ) | சேகரிக்கப்படுகின்ற தொகைகளை வங்கியில் வைப்பிலிடுதல், காசோலைகளை எழுதுதல், காசேட்டைப் பேணுதல் போன்ற விடயங்களிற்குத் தொடர்பில்லாத அலுவலர் ஒருவரினால் வங்கிக்கணக்கினக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தும், மேலே அனைத்து விடயங்களும் ஒரே அலுவலரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| 4.2.6 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தினால் 03 மாதங்களுக்கு ஒரு முறை செயலாற்றுகை அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டு காலாண்டு நிறைவடைந்து 30 நாட்கள் பூர்த்தியடைவதற்கு முன் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்தும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03 / 2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் பணிகள் நிறைவடைந்ததும் தீர்க்கப்படவேண்டியிருந்தும், ரூபா 326,903 கூட்டுத்தொகையான முற்பணங்கள் மீளாய்வு ஆண்டின் முடிவில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய 1/ 2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 மற்றும் 3.2.2 ஆம் பிரிவுகள். | எரிபொருள் கொடுப்பனவு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு மேலதிக எரிபொருள் வழங்கும்போது வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவேண்டியிருந்தும், மீளாய்வு ஆண்டில் 06 மாத மாதிரி பரிசீலனைக் காலத்தினுல் அத்தகைய அங்கீகாரம் இன்றி 15 சந்தர்ப்பங்களில் ரூபா 166,955 பெறுமதியான மேலதிக எரிபொருளிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (உ) | 1978 ஆம் ஆண்டின் திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | சபைக்கு உரித்தான ரூபா 38,884,096 கூட்டுத்தொகை பெறுமதியான காணி,கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகணங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் இடாப்பொன்று நாளதுவரைப்படுத்திப் பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.5 போதியளவில் நிறைவேற்றப்படாத அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

மூடப்பட்டிருந்த ஓட்டுத் தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்காக பொதுத்திறைசேரியின் மற்றும் வரிசை அமைச்சின் எழுத்துமூலமான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 12,500,267 ஆன தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 3,585,434 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 8,914,833 இனால் அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களிற்காக திறைசேறியிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 63,379,054 தொகை 2016 ஆம் அண்டில் கிடைக்காதிருந்தும் மீளாய்வாண்டின் போது விற்பனைகள் ரூபா 60,147,061 இனால் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 3,631,958 இனால் அதிகரித்தமை மற்றும் தாபன மற்றும் நிருவாக செலவினங்கள் ரூபா 49,893,646 இனால் குறைந்திருந்தமை மேற்படி அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2014 ஆம் ஆண்டில் நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2012,2013,2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தேறிய இலாபத்தினைப் பெற்றிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையல்லா

சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீளச் சீராக்கிய போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 70,430,185 ஆன கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது ரூபா 35,980,387 வரையிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது ரூபா 10,978,743 வரையிலும் குறைந்திருந்தது. இருந்தும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பங்களிப்பு மீண்டும் அதிகரித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதியாகும் போது ரூபா 75,889,133 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் ஆகியன 2015 ஆம் ஆண்டின் போது, முறையே 0.34 மற்றும் 0.12 ஆக இருந்ததுடன், அது 2016 ஆம் ஆண்டின் போது முறையே 0.42 மற்றும் 0.21 ஆக இருந்தது. இந்த திரவத்தன்மை விகிதம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமையால், நிறுவனத்தின் திரவத்தன்மை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது 3.07 சதவீதமாக காணப்பட்ட சபையின் மொத்த இலாப விகிதம் 2016 ஆம் ஆண்டளவில் 14.65 சதவீதம் வரையில் 377 வீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் 4.15 விகிதமாகக் கானப்பட்ட தேறிய இலாப விகிதம் 2016 ஆம் ஆண்டளவில் 8.54 விகிதம் வரையில் 248 வீதத்தினால் அதிகரித்திருந்தது. இவ்வளர்ச்சிக்காக விற்பனைக் கிரயத்தின் வளர்ச்சியை விட அதி வேகத்தில் விற்பனைப் பெறுமதி அதிகரித்தமை, ஏனைய வருமானங்கள் 145 வீதத்தால் அதிகரித்தமை மற்றும் தாபன நிர்வாக செலவினங்கள் 77 வீதத்தினால் குறைந்திருந்தமை காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1958 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம், இலங்கையில் தரமான பல வகையான ஓடுகள், செங்கற்கள் மற்றும் களி மண்ணுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்து சந்தையில் முதலிடத்தைப் பெறல் மற்றும் போட்டி விலைகளின் கீழ் அனைத்து நுகர்வோரையும் திருப்திப்படுத்தக் கூடிய விதமாக பண்டங்கள் வழங்குதல் மற்றும் அதன் மீது சமூகம் சார் பொறுப்பு ஒன்றினை மேற்கொள்ளல் கூட்டுத்தாபனத்தின் முக்கியமாக குறிக்கோளாகும்.

இந்த குறிக்கோள்களை எய்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு உரித்தான 09 தொழிற்சாலைகளையும் நீண்டகால முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கும் நோக்கில் நிறுவனத்தை மீள்கட்டமைப்பு செய்யும் அமைச்சரவை தீர்மானத்திற்கேற்ப, தலைவர், மற்றும் பணிப்பாளர் சபையை அகற்றி 2010 ஜூலை மாதம் 01 அம் திகதி முதல் தகுதிவாய்ந்த அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கும் செயன்முறையின் முதல் கட்டமாக 2012 ஆம் வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து தன்னார்வ இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஊழியர்கள் ஓய்வு பெறச்செய்யப்பட்டிருந்தாலும் 2017 திசம்பர் வரையிலும் மீள்கட்டமைப்பு அறிவுருத்தல்களின் படி எந்த தொழிற்சாலையையும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ஒப்பந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 05 தொழிற்சாலைகள் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்கு உரித்தான 09 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் பல்வேறுபட்ட காரணங்களினால் மூடப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் இறக்காமம் மற்றும் உஸ்வெவ ஆகிய இரண்டு தொழிற்சாலைகளில் மாத்திரம் முறையே ரூபா 34,836,777 தொகை மற்றும் ரூபா 5,936,366 தொகை இலாபம் பெற்ப்பட்டிருந்ததுடன், ஏனைய மூன்று தொழிற்சாலைகளிலும் மொத்த நட்டம் ரூபா 14,296,235 தொகை காணப்படட்டது.

(இ) 2015 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் பிங்கிரிய மற்றும் மஹியங்கனை ஆகிய இரண்டு தொழிற்சாலைகளிலும் நட்டம் குறைந்திருந்ததுடன், இறக்காம தொழிற்சாலையின் இலாபம் அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் நட்டமடைந்திருந்த உஸ்வெவ தொழிற்சாலை 2016 ஆம் ஆண்டில் ரூபா 5,936,366 தொகை இலாபத்தை ஈட்டியிருந்ததுடன், மீளாய்வு ஆண்டில் யட்டியன தொழிற்சாலையின் நட்டம் மாத்திரம் ரூபா 2,599,853 தொகையால் அதிகரித்திருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டில் சபையின் உற்பத்திக் கூறுகள் 3,112,050 ஆகக் கானப்பட்டதுடன், அதற்கு ஒப்பீடாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் உற்பத்தியில் வருடாந்தம் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் மீண்டும் உற்பத்திக் கூறுகள் 2,609,256 வரையில் அதிகரித்திருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் உற்பத்திக் கூறுகள் 3,950,914 வரையில் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் உற்பத்தி 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் முறையே 20.6 வீதமாகவும் 51.4 வீதமாகவும் அதிகரித்திருந்தது.

(உ) சபையின் உற்பத்தி விற்பனை வருமானம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 112,655,859 ஆகக் கானப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டாகும் போது அத்தொகை ரூபா 77,920,760 வரையில் 30.8 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் விற்பனை வருமானம் வருடாந்தம் அதிகரித்திருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அத்தொகை ரூபா 156,682,174 ஆகக் கானப்பட்டது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் 84.6 வீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஊ) மீளாய்வு ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம், செயல்நடவடிக்கைகள் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நோக்கங்களை அடைந்துகொண்ட முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆதலால் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்ளும் முன்னேற்றத்தை பரிசீலிக்க முடியவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு 90 நாட்களில் அறவீடு செய்துகொள்ளல் எனும் அடிப்படையில் 2012 ஆம் வருடத்தில் ரூபா 5,000,000 வட்டியற்ற தற்காலிகக் கடன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போதும் குறித்த கடனை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் வருடத்தில் நியமனம் வழங்கப்பட்ட தகுதிவாய்ந்த அலுவலருக்கு தற்போதைய வரிசை அமைச்சரின் மற்றும் திறைசேறியின் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

சபையினால் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிலையான சொத்துக்களின் மாற்று மிகையாக ரூபா 23,372,090 கணக்குகளில் பதியப்பட்டிருந்தாலும் அதனுடன் தொடர்பான சொத்துக்களின் மாற்றுக்களுக்காக நிதி முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கருத்து முரண்பாட்டிற்கு காரணமான கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வு ஆண்டினுல் உஸ்வெவ ஓட்டுத் தொழிற்சாலையினால் தனியார் நிறுவனமொன்றின் குறியீட்டுப் பெயருடன் (DSI ) 10,880 ஓடுகள் 2016 செப்டெம்பர் தொடக்கம் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 214,433 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வுற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளிலிருந்து 6,492 ஓடுகள் விற்பனை செய்யக்கூடிய தரத்தில் இருந்தும் DSI குறியீட்டுப் பெயரையுடைய தனியார் நிறுவனத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 10 தொடக்கம் 13 வரையிலான பந்திகளில் காட்டப்பட்டுள்ள விடயங்களிற்கேற்ப குறித்த ஓடுகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 பொருளாதமற்ற கொடுக்கல்வாங்களகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்திற்கு அமைவாக உரியவாறு பணிக்கொடைக் கொடுப்பனவுகள் கணிக்கப்பட்டு உரிய காலத்தினுள் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததனால் மீளாய்வு ஆண்டினுல் ரூபா 141,146 மிகைவரித் தொகையாக செழுத்தவேண்டியிருந்தது.

(ஆ) சேவையை நியாயமற்ற முறையில் முடிவுறுத்தியதற்கு எதிராக இரண்டு ஊழியர்களினால் தொழில் நியாய சபையில் தொடரப்பட்ட வழக்குத்தீர்ப்பின் பிரகாரம் தொழில் நியாய சபையினால் அவ்வூழியர்களுக்காக செலுத்துவதற்குத் தீர்ப்பளிக்கப்பட்ட தொகையான ரூபா 1,081,800 இழப்பீட்டுத் தொகையொன்று வருடத்தினுள் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் 2012 ஆண்டின் போது கூட்டுத்தாபன மறுசீரமைப்பு செய்த போது நட்டஈடு வழங்கி ஊழியர்களை அகற்றி பின்னர் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால நடவடிக்கைகளை நடத்துவதற்கு தேவையான பதவியணியினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மேற்படி சுற்றறிக்கையின் 9.10 பிரிவின் பிரகாரம் வெற்றிடமான பதவிகளுக்கு ஒப்பந்த, நிமித்த அல்லது ஏனைய அடிப்படையின் கீழ் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது திறைசேறிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் 61 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) அரச முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் அமைச்சர் பதவியனியில் முழு நேர சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்கு கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டில் கூட்டுத்தொகை ரூபா 50,000 உம், 2017 ஆம் ஆண்டினுள் ரூபா 280,000 உமாக மொத்தம் ரூபா 330,000 செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவி உயர்வு செய்தல் முறைமையொன்றை அங்கீகரித்துக்கொள்ளாமல் மற்றும் முறையான ஆட்சேர்ப்பு முறைமையொன்றை கடைப்பிடிக்காமல் நிதி முகாமையாளரொருவர் 2015 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வு ஆண்டில் மொத்தமாக ரூபா 675,000 தொகை சம்பளம் மற்றும கொடுப்பனவுகளாக செழுத்தப்பட்டிருந்தன. அவ் உத்தியோகத்தரின் சேவை 2017 ஜனவரி மாதம் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்காமை

2003 ஜூன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 திசம்பர் 22 ஆந் திகதியன்றே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக நிறுவனத்தின் முகாமையாளர்கள் மீதான பொறுப்புக்கள் தொடர்பாக தெளிவாகக் காட்டப்பட வேண்டியிருந்தும், சபையினால் அதற்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 05 (2) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட வியாபார திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு வரும் நிதியாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற வர்த்தக செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வுக் குழுக்கள்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் படி ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் கணக்காய்வுக் குழு நடத்தப்பட வேண்டும். எனினும், சபையினால் மீளாய்வாண்டினுள் ஒரு கணக்காய்வு குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 5.5 பெறுகைகள் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய மற்றும் 08 ஆம் இலக்க அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 4.2 பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வு ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8(1) பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 பிரிவின் படி சபையினால் மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.7 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை மும்மொழிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் 2017 திசம்பர் மாதம் வரையிலும் பாராளுமன்றத்திறகு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தகுதிவாய்ந்த அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | (i) நிறுவனத்தின் பேரேட்டுக் கணக்கு, புத்தகங்களும் ஏடுகளும் நாளது வரையாக பேணப்படாமை.<br>(ii) கணக்குக் கிளை நடவடிக்கைகளுக்காக நிரந்தரப் பதவியணியின் அலுவலரொருவர் சேவையில் ஈடுபடுத்தப்படாமை.<br>(iii) முற்பணக் கணக்கு வைத்தல் தொடர்பான செயன்முறையை முறையாகப் பேணாமை,முற்பண ஏடொன்றைப் பேணாமை<br>(iv) நிறுவனத்தினுல் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயல்முறையொன்றைச் செயற்படுத்தாமை |
| (ஆ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) நடைமுறையல்லாச் சொத்துக்களை பௌதீக சரிபார்ப்புக்கள் மேற்கொள்ளப்படாமை<br>(ii) பௌதீக இருப்புக்களின் கணக்கீட்டினை குறுகிய காலத்தில் முடிவுறுத்தாமை |
| (இ) | நடவடிக்கைக் கட்டுப்பாடு | தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கும் செயல்முறையை நடைமுறைப்படுத்தாமை |